The Speaker may direct that lengthy answers or statistics given in answer to a starred question shall be laid on the table and printed in the official report of the proceedings of the Assembly instead of being given orally.

அதாவது "ஸ்டார்டு கொஸ்டின்" ஆக வந்ததைக் கூட "அன்-ஸ்டார்டு கொஸ்டின்"ஆக ஆக்கலாம் என்ற உரிமை இருக்கிறது. அப்படி அனுமதிக் கலாம் என்று ஸ்பீக்கருக்கு உரிமை இருக்கிறது. என் இப்படி செய்தீர்கள் என்று கேட்க உறுப்பினருக்கு உரிமை இல்லை.

திரு. கே. விநயகம் : தலைவர் அவர்களே, "ஸ்டார்டு கொஸ்டின்"ஆகக் கொடுப்பதற்கான காரணமே பொது மக்களுக்குத் தேவையான பதில் களைப் பெற வேண்டு மென்பதற்காகத் தான். மேலும் உறுப்பினர்கள் சப்ளிமெண்டரி கேள்விகள் போடுவதற்கும் வாய்ப்பு இருக்கிறது. "ஸ்டார்டு கொஸ்டினை" அன்-ஸ்டார்டு" ஆக்கிவிட்டால் அது பொது மக்களுக்கும் தெரியாமல் போய்விடும். எனக்கும் சப்ளிமெண்டரி கேள்விகள் போடு வதற்கு வாய்ப்பு இல்லாமல் போய்விடும். (மணியடிக்கப்பட்டது.) பொது மக்களுக்கு விளக்கம் கொடுக்க என்னால் முடியாது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : "ஸ்டார்டு கொஸ்டினை" "அன்-ஸ்டார்டு" ஆக்கி, பதில்களை அச்சடித்துக் கொடுத்துவிட்ட பிறகு மேலும், தகவல் தெரிய வேண்டு மென்று உறுப்பினர் விரும்பினால், மீண்டும் கேள்வி கேட்க உறுப்பினருக்கு உரிமை இருக்கிறது.

THE HON. THIRU C. N. ANNADURAI : Sir, the hon. Member's querry was, under what authority have you . . .

THIRU K. VINAYAKAM : That he has explained.

THE HON. THIRU C. N. ANNADURAI : Then the hon. Member should be satisfied with that.

திரு. கே. விநயகம் : தலைவர் அவர்களே, இப்போது திருத்தணியில் ஒரு பஸ் ஸ்டாண்ட் ஏற்படுத்துவார்களா என்ற கேள்வி கேட்டால், அது ஒரு பிரதேசத்தைப் பொறுத்த கேள்வி என்று எண்ணி அதை "அன்-ஸ்டார்டு" ஆக்கிவிட்டால் பொது மக்களுக்கு நான் அந்தக் கேள்வியைக் கேட்டதாகக் கூடத் தெரியாமல் போய்விடும். ஆனால் பாலிசியைப்பற்றி, புரொகிபிஷன் பற்றி, மர்டர் பற்றி கேள்வி கேட்டால் அதை "அன்-ஸ்டார்டு" ஆக்கினால் . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நம்முடைய விதிமுறையே இருக்கிறது, கொள்கையைப் பற்றியும், பாலிசியைப் பற்றியும் கேள்வி போடக் கூடாது என்று.

(iii) முதலமைச்சர் விடையளிக்க வேண்டிய வினாக்களை எடுத்துக் கொள்ளும் நேரம்

DR. H. V. HANDE : Sir, on a point of order with regard to the order in which the questions are to be taken up, one of my colleagues Thiru Meiyappan also raised it recently—it would be better for us if we know when the Hon. Chief Minister is going to answer the questions put to him. To-day the Hon. Chief Minister unusually nswered his questions first but I wanted to put supplementary questions with regard to them. For instance, in the ease of Short Notice Questions, we know that they are going to be taken up first and the Departments also would be ready with their answers. So, we should have asort of system by which we should know when the Hon. Chief Minister is going to answer his questions so that it

would be convenient for us. I am not making this as a sort of complaint. Sir, according to the rules, we can postpone the questions to a later date but we cannot postpone them to the same day..

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இதைப் பற்றி நான் முன்பே இந்த மன்றத்திலே உறுப்பினர் கேட்டு, அதற்கு விளக்கம் அளித்திருக்கிறேன். உறுப்பினர் கால தாமதமாக வந்தால், உறுப்பினருடைய உரிமை பறிபோய் விடவில்லை, வாய்ப்பும் போய்விடவில்லை. அமைச்சர் நேரம் கழித்து வந்து என்னுடைய கேள்வியை நாளைக்கு வைத்துக் கொள்ளுங்கள் என்று கேட்டால், மறு நாளைக்கு அவையில் அதைக் கொண்டு வராமல் இருப்பதில்லை. இப்படி இப்படித்தான் கொண்டு வர வேண்டுமென்று சொல்வது நடைமுறைக்கு ஒத்துவராது. இதிலே ஒரு குறிப்பிட்ட திட்டத்தைத்தான் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பது முடியாது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

Dr. H. V. HANDE : Sir, my only request to the Chair is, that if the Hon. Chief Minister's questions can be put at the end it will be convenient for us and we should have a system by which we can take up this questions at the end.

The Hon. Thiru C. N. ANNADURAI : Sir, I endors the hon. Member's suggestion that my questions should be taken up after all the other questions are over.

3. தன்னிலை விளக்கம்

டாக்டர் எச். வி. ஹாண்டே வினா நேரத்தில் மற்றொரு உறுப்பினரைப் பற்றித் தெரிவித்த கருத்து குறித்து

Dr. H. V. HANDE : On a point of a personal explanation, Sir . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இதெல்லாம் முடிந்துவிட்ட பிறகு சொல்லலாம்.

Dr. H. V. HANDE : Sir, on a point of personal explanation, yesterday my hon. Friend Thiru Rama Arangannal raised a point of order when I said that he was very allergic to the question. I want to clarify the position. I have nothing against the hon. Member. He is a distinguished member of this House and I have the greatest respect for him. I am even prepared to withdraw the expression used at that time if it had hurt him. I was a little upset when he intervened and I thought he was putting an obstacle. I have absolutely no ill-feeling. I have the greatest regard for my colleagne Thiru Rama Arangannal. This is what I want to say by way of personal explanation.

4. வினாக்களை அமைச்சர்வாரியாக ஒவ்வொரு நாளும் வரிசைப்படுத்தல் மு.ப.

திரு. பி. ஜி. கருத்திருமன் : உதவித் தலைவர் அவர்களே, என்னு 10-00
டைய ஆலோசனையை கேள்விகளைப் பொறுத்த வரையில் சிறு விளக்கமாகச் சொல்ல விரும்புகிறேன். பாராளு மன்றத்திலே எல்லா அமைச்சர்களும் ஒரு நாளிலே கேள்விகளுக்குப் பதில் சொல்வதில்லை. இன்ன இன்ன அமைச்சர்கள் இன்ன இன்ன சப்ஜெக்ட்டுகளைப் பற்றி இன்ன இன்ன நாட்களில் கேள்விகள் போடவேண்டுமென்று முறை இருக்கிறது. முதலமைச்சர் கேள்விகள் என்றால் புதன்கிழமை, அல்லது வியாழக்கிழமை என்று போட்டுவிட்டால் நிச்சயமாக சௌகரியமாக இருக்கும் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். பாராளுமன்றத்திலே ஒவ்